# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



137

பதிவு அஞ்சல் ஒப்புகைச் சான்றுடன்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திருமதி. ஆ.மணிமேகலை, பி.இ.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
க.எண். 6/12,17 பரமத்தி ரோடு (தெற்கு பகுதி)
நாமக்கல் – 637 001.
போன்: 04286–290067
e-mail: dtcp.namakkal@gmail.com

பெறுநர்
தலைவர்,
என்.புதுப்பட்டி ஊராட்சி,
மோகனூர் ஊராட்சி ஒன்றியம்,
மோகனூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

---

ந.க.எண்.2547/2021 நாமா, நாள்:17.12.2021

அம்மையீர்/ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம்– மோகனூர் வட்டம் – மோகனூர் ஊராட்சி ஒன்றியம் – என்.புதுப்பட்டி ஊராட்சி/கிராமம் – சர்வே எண்.151/1,151/3–ல் 3.49½ ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி– தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. மனுதாரர். திருமதி.P.வளர்மதி மற்றும் இருவர், மோகனூர் அவர்களின் விண்ணப்பம் நாள்.09.09.2021, 22.10.2021, 24.11.2021 மற்றும் 03.12.2021.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.24.09.2021, 26.10.2021 மற்றும் 02.12.2021.
3. நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண். இ4/7901/2021, நாள்.16.09.2021.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்.26.04.2021
5. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள். 04.05.2017.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்09.12.2020.

10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.

11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/LA1, நாள்.08.09.2017.

******

**உத்திரவு:**

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய கடிதங்கள் மூலம் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலகக் கடிதம் நாள்.26.10.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1–ல் சுட்டிய 24.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக (பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம்) தானபத்திரம் எண்.5026/2021 மற்றும் 5027/2021, நாள்.19.11.2021–ல் ஒப்படைக்கப்பட்ட பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ(நாமா) எண்.191 /2021 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை:**

1. a) பார்வை 8–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7–ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)–ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants ". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.
(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

134

water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால், கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020–ன்படி EWS மனைகள் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No:112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Read Estate (Regulation & Development Act, 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only afte registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6–ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/– ஐயும் மற்றும் விதி எண்.9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 5 மற்றும் 9–ல் காண் அரசாணையின்படி உரிய கட்டணங்களை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டதனைத் தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படப்படுகிறது.

**இணைப்பு:**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்புகள் மற்றும் அசல் தானபத்திரம்)

17/1/23

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

17.12.23

**நகல்** 140

1. திருமதி.P.வளர்மதி மற்றும் இருவர்,
கதவு எண்.5/1290,
பயனீர் எஸ்டேட்,
வாசவி காலேஜ் அஞ்ல்,
லட்சுமி நகர், மேட்டுநாகுவம்பாளையம்,
பவானி வட்டம், ஈரோடு மாவட்டம்.
ஈரோடு மாவட்டம்.

2. வட்டார வளர்ச்சி அலுவலர்,
மோகனூர் ஊராட்சி ஒன்றியம்,
மோகனூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

3. Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No:1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore,
Chennai – 600 008.

4. இருப்புக் கோப்பு.

143

# என்.புதுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை திருமதி.S. கவிதா

ந.க.எண்: 01/2022/ ம.பி.எண்.1

நாள்:01/06/2022

பொருள்: மனைப்பிரிவு - மோகனூர் வட்டாரம், என்.புதுப்பட்டி ஊராட்சி / கிராமம் - சர்வே எண்கள்:151/1, 151/3 – ல் அமைந்துள்ள 3.49 ½ ஏக்கர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு - தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1.மனுதாரர் திருமதி.P.வளர்மதி மற்றும் இருவர் மேட்டுநாசுவம்பாளையம் அவர்களின் கடிதம் நாள்: 25.03.2022

2. நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் எண்.இ4/10418/2021, நாள்:11.11.2021.

3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/ போ,நாள்:26.04.2021.

4.அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3) த் துறை, நாள் :04.06.2004.

5. அரசாணை எண்.79,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)) த் துறை, நாள்:04.05.2017.

6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:31.01.2020.

7. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்:23.09.2020.

8. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ(4(3))த் துறை, நாள்:09.12.2020.

9.அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்:30.08.2017.

10. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்: 08.09.2017.

11. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு நாமக்கல் அவர்களின் ந.க.எண்:2547/2021/நா/மா/17.12.2021.

ஆணை

பார்வை (1) - இல் காணும் மனுதாரர் மோகனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட என்.புதுப்பட்டி ஊராட்சி சர்வே எண்: 151/1, 151/3 அமைந்துள்ள 3.49 ½ ஏக்கர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனு செய்ததின் பேரில், சர்வே எண்: 151/1, 151/3 அமைந்துள்ள 3.49 ½ ஏக்கர் மனைப்பிரிவு நிலத்தில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்டம் அவர்கள் ந.க.எண்: 2547/2021 நாமக்கல் நாள்: 17.12.2021ன் ம.வ/ந.ஊ(நாமா) எண்: 191/2021 ன் படி பார்வை 11ல் கண்டுள்ளவாறு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகளில் தெரிவித்துள்ளவாறு உத்தேச மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட சாலைகளுக்காக 47167.00 ச.அடி பரப்பளவும் பூங்காவிற்காக 10615.00 ச. அடியும் மற்றும் உள்ளாட்சிக்கு பொது உபயோகத்திற்காக 529.40 சதுர அடியும் மோகனூர் சார்பதிவாளர் ஆவண எண்: 5026/2021 இன் படி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 11 ல் காணும் செயல்முறையில் பார்வை 2 ல் கண்டுள்ள அரசாணையின் படி உரிய கட்டணத்தை மனுதாரரிடம் தொடர்புடைய ஊராட்சி வசூல் செய்த பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்க வேண்டுமெனவும்,பார்வை 4 ல் கண்டுள்ள அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் ( GUIDE LINE VALUE) 3 சதவீத கட்டணத்தை (Challan Number : 20220404010940, தொகை ரூ.84420/-) வசூல் செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்பதல் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் அரசாணை (நிலை) எண்.79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.05.2017 -ன் படி அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் 3% படி கட்டணமாக ரூ.84420/- (Challan Number : 20220404010940) உரிய அரசு கணக்கு தலைப்பில் 04.04.2022 அன்று செலுத்தி என்.புதுப்பட்டி ஊராட்சிக்கு செலுத்தியுள்ளார் சலான் அசல் மற்றும் நகல் வழங்கியுள்ளார்.

இதேபோன்று அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 ன் படி அனுமதியளிக்கப்பட்ட மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 67 மனைகளுக்கு ரூ.67000/- த்தை மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் பராமரிக்கப்பட்டு வரும் Layout Development Charges என்கிற கணக்கில் (1211101028720) 04.04.2022 அன்று செலுத்தி சலான் நகல் வழங்கியுள்ளார்.

எனவே மனுதாரரால் உரிய கட்டணத் தொகை செலுத்தப்பட்டுவிட்டதால் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு சர்வே எண்: 151/1, 151/3 ல் 3.49 ½ ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள 67 மனைகளுள் இறுதி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

## நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை மாற்றி அமைத்தல் கூடாது.
2. வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளை வீடுகள் மட்டுமே கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் எதுவும் ஏற்படுத்திட அனுமதியில்லை.
3. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
4. ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திர பதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்தே பத்திரம் பதிவு செய்திடல் வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
6. பத்திர பதிவுகள் மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. கட்டிட வரம்பு - சாலைக்கு 5 அடி விடப்பட வேண்டும்.
   ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட சாலைகளின் மின் கம்பங்கள் அமைத்து, தெருவிளக்குகள் அமைத்துக் கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகிறது.
8. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவினை வழங்கப்பட்ட உத்தரவால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
   மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

S.Kavitha 1/6/2022.
தலைவர்
என்.புதுப்பட்டி ஊராட்சி,
மோகனூர் வட்டாரம்.

பெறுதல்

திருமதி.P. வளர்மதி
மற்றும் இருவர்
லட்சுமி நகர், மேட்டுநாசுவம்பாளையம்
பவானி வட்டம்,
ஈரோடு மாவட்டம்

நகல்-

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, நாமக்கல்.
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மோகனூர் வட்டாரம் - தகவலுக்காக.
4. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், மோகனூர் - தக்க நடவடிக்கைகள்
5. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மோகனூர் வட்டம் தக்க நடவடிக்கைகள்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate